## என் போன்ற விவசாயிகள் வாழ்க்கைத்தரம் கண்டிப்பாக உயரும் !!



நான் சந்திரபாலன், 50 வயது, விவசாய குடும்பத்தில் பிறந்தவன். எனது குடும்பத்தில் அனைவருமே விவசாயம் தான் பிரதான தொழில், பி.ஏ. வரை படித்துள்ளேன். எனக்கு 2 ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தையும் உள்ளது.

எனக்கு 6 ஏக்கர் நன்செய் நிலத்தில் நெல் சாகுபடியும் ஒரு ஏக்கர் புன்செய் நிலத்தில் தென்னை சாகுபடியும் செய்துள்ளேன். எங்கள் பகுதியில் தென்னை விவசாயம் பிரதான பயிர். நான் மட்டுமல்லாது எனது நண்பர்கள் உற்றார் உறவினர்கள் அனைவரும் இந்த தென்னை பயிரை பயிரிட்டு பலன் பெற்று வருகின்றனர். நாங்கள் அனைவருமே தேங்காய் வியாபாரிகள் சொன்ன விலைக்குத்தான் இதுவரை விற்பனை செய்து வந்தோம்.

இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கும்பகோணம் மார்கெட் அனாலிஸ்ட் மூலம் தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளும் சேவையை பற்றி அறிந்து என்னுடைய செல் நம்பரை பதிவு செய்தேன்.

என்னுடையது மோட்டோரெல்லா செல்போன். தினமும் மதியம் 2.30 மணிக்கு விலை நிலவரங்களை தெரிந்து கொள்வேன்.

கடந்த சில மாதங்களாக தினசரி, தேங்காய் விலை திருச்சி மார்கெட் நிலவரம் மற்றும் கும்பகோணம் மார்கெட் நிலவரம் தினம் தெரிந்து கொண்டு வியாபாரிகளுடன் சண்டையிட்டு கூடுதலாக விலை பெற முடிகிறது. எங்கள் நண்பர்களிடமும் என்னிடமும் வியாபாரிகள் காய் வாங்க வரும் பொழுது கண்டிப்பாக மற்றவர்களுக்கு கொடுப்பதை விட 50 பைசா வரை கூடுதலாக ஒரு காய்க்கு விலை கிடைக்கிறது. கண்டிப்பாக இந்த சேவையை பயன்படுத்திய பிறகு தான் இந்த கூடுதல் லாபம் தெரிகிறது.

தென்னை விவசாயிகள் தாங்கள் விலை வித்த காய்களை மதிப்புக் கூட்டுதல் செய்து விற்பனை செய்வதற்கு வேண்டிய உதவிகள் அதற்கான பயிற்சிகள் இதனை இலவசமாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் செய்து கொடுத்ததால் எங்கள் வாழ்க்கைத் தரம் மேலும் உயரும் என எதிர்பார்க்கிறேன். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தனியாக ஒரு தொலைக்காட்சி சேனல் ஆரம்பித்து அதில் இது போன்ற தகவல்களை நேரிடையாக வெளியிட்டால் இதை விட பயனுள்ளதாக இருக்கும்.

இந்த வித்தியாசமான விவசாயிகளுக்கான தகவல் தொழில் நுட்ப புரட்சி கண்டிப்பாக என் போன்ற விவசாயிகள் வாழ்க்கைத்தரம் கண்டிப்பாக உயரும் என என்னுகிறேன்.

திரு. மு. சந்திர பாலன்,

த/பெ. முருகையன் மூப்பனார்,

கருப்பூர் (அஞ்சல்),பாபநாசம் தாலுக்கா,

தஞ்சாவூர் மாவட்டம் – 614 203

அலைபேசி: 09791946956